1.‘குன்றின் மேலிட்ட விளக்குப் போல’ என்ற உவமையால் விளங்கும் பொருள்
a) மக்களின் புகழ் பரவுதல்
**b) அன்னை தெரசாவின் புகழ்**
c) பெற்றோர் பெருமையடைதல்
d) மாணவர் மதிப்பெண் பெறுதல்

2. ‘பூவுடன் சேர்ந்த நாரும் மணப்பது போல’ என்ற உவமையால் அறியப்படும் கருத்து
**a) புகழ்** b) நட்பு c) துன்பம் d) சுற்றம்

3. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் ‘மழை கண்ட பயிர் போல’’
a) புகழ்தல் b) களித்தல் **c) மகிழ்ச்சி** d) அழுகை

4. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்க. ‘அடுத்தது காட்டும் பளிங்கு போல்’’
a) வைரம் **b) கண்ணாடி** c) இரத்தினம் d) முத்து

5. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல் ‘அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல’’
**a) பொறுத்தல்** b) புகழ்தல் c) போற்றுதல் d) களித்தல்

6. பின்வரும் தொடரில் அமைந்த மோனையைத் தேர்ந்தெடுக்க.
“வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வனைகழல் அரசரின் வண்மை மிக்கிடும்’’.
a) திலகத்தின் - மனத்தின்
**b) வனிதையர் - வனைகழல்**
c) வண்மை - மிக்கிடும்
d) அரசரின் - மாண்பையோ

7. பின்வரும் தொடரில் அமைந்த எதுகையைத் தேர்ந்தெடுக்க.
“தருமமே காத்ததோ? சகைன் நல்வினைக்
கருமமே காத்ததோ? கற்பின் காவலோ’’
a) தருமமே — காத்ததோ
b) சகைன் - காத்ததோ
c) கற்பின் - காவலோ
**d) தருமமே — கருமமே**

8. பின்வரும் தொடரில் அமைந்த இயைபுத் தொடையை அறிக.
‘எண்ணிலா இரத்தினங்கள் இதனுளே பிறந்த போதும்
புண்ணியத் திருவினாளைப் புதல்வியாய்ப் பெற்ற போதும்’’
a) எண்ணிலா — புதல்வியாய்
b) புண்ணியத் - திருவினாளை
**c) பிறந்த போதும் - பெற்ற போதும்**
d) இரத்தினங்கள் - இதனுளே

9. ‘அங்கொன்னும் இங்கொன்னும் முன்னர்த் தோன்றி அடுத்த நொடி வான்நிறையும் விண்மீன் கூட்டம்’ - இதில் அமைந்துள்ள எதுகையினைக் கண்டறி.
**a) அங்கொன்னும் — இங்கொன்னும்**
b) அங்கொன்னும் - அடுத்த நொடி
c) அங்கொன்னும் - வான் நிறையும்
d) அங்கொன்னும் - விண்மீன்

10. பின்வரும் பாடலில் அமைந்த மோனையை எழுதுக.
“உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்’’
a) உள்ளிய — தெல்லாம்
b) உள்ளிய் - வெகுளி
**c) உள்ளிய — உள்ளான்**
d) உள்ளிய — யெனின்

11. எவ்வகை வாக்கியம் எனத் தேர்வு செய்க.
மாணவர்கள் அனைவரும் சீருடையில் வர வேண்டும்.
**a) செய்தி வாக்கியம்** b) உணர்ச்சி வாக்கியம்
c) கலவை வாக்கியம் d) கட்டளை வாக்கியம்

12. எவ்வகை வாக்கியம் எனத்தேர்வு செய்க.
“யார் கல்விச் செல்வம் பெறுகிறார்களோ அவர்கள் வாழ்வில் வளம் பெறுவர்’’
a) வினா வாக்கியம் b) செய்தி வாக்கியம்
**c) கலவை வாக்கியம்** d) கட்டளை வாக்கியம்

13. எவ்வகை வாக்கியம் எனத்தேர்வு செய்க.
“அனைவரும் நல்லமுறையில் தேர்வு எழுதினர்’’
a) உணர்ச்சி வாக்கியம் b) கட்டளை வாக்கியம்
c) வினா வாக்கியம் **d) செய்தி வாக்கியம்**

14. எவ்வகை வாக்கியம் எனத்தேர்வு செய்க.
“ஆ’’ வானத்து விண்மீன்கள் என்னே அழகு!
a) கட்டளை வாக்கியம் **b) உணர்ச்சி வாக்கியம்**
c) கலவை வாக்கியம் d) செய்தி வாக்கியம்

15. எவ்வகை வாக்கியம் எனத்தேர்வு செய்க.
ஏன் உனக்கு உடம்பு சரியில்லையா?
**a) வினா வாக்கியம்** b) செய்தி வாக்கியம்
c) கலவை வாக்கியம் d) உணர்ச்சி வாக்கியம்

16.பிறவினைத் தொடர் அறிக.
a) செல்வனால் குமரன் திருந்தினான்
**b) செல்வன் குமரனைத் திருத்தினான்**
c) செல்வனால் குமரனைத் திருத்தியது
d) செல்வன் குமரன் திருத்தினான்

17. தன்வினைத் தொடரை எழுதுக.
**a) பாலன் நடனம் கற்றான்**
b) பாலனால் நடனம் கற்பிக்கப்பட்டது
c) பாலனே நடனம் கற்பித்தான்
d) நடனம் பாலனுக்குக் கற்பிக்கப்பட்டது

18.தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.
a) பூங்கோதை பொம்மை செய்வித்தாள்
b) மழைநீர் மக்களால் சேமிக்கப்பட்டது
c) நற்செயல்களை அனைவரும் போற்றுவர்
**d) பூங்கோதை பொம்மை செய்தாள்**

19. செய்வினை வாக்கியத்தைக் கண்டறிக.
a) வீடு கட்டப்பட்டது
b) அன்னை அன்பு காட்டுவார்
**c) மாணவர்கள் வகுப்பைத் தூய்மை செய்தனர்**
d) காகம் தொடர்ந்து கரைந்தது

20. செயப்பாட்டு வினைத்தொடரை அறிக.
**a) தச்சனால் கட்டில் செய்யப்பட்டது**
b) தச்சன் கட்டில் செய்தான்
c) தச்சனால் செய்தது கட்டில்
d) தச்சர் செய்தார் கட்டில்

21. ‘தடக்கை’ என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.
a) பெயர்ச்சொல் **b) உரிச்சொல்**
c) வினைச்சொல் d) தொகைச்சொல்

22. ‘மனமொழி மெய்’ என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.
a) உவமைத்தொகை **b) உம்மைத்தொகை**
c) பண்புத்தொகை d) வினைத்தொகை

23. ‘தைத் திங்கள்’ என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.
a) உம்மைத்தொகை b) முரண்தொடை c) பெயரெச்சம்
**d) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

24. ‘வருநிதி’ என்பதன் இலக்கணக் குறிப்பு எழுதுக.
a) பண்புத்தொகை **b) வினைத்தொகை**
c) தொழிற்பெயர் d) வினைமுற்று

25. ‘மதிமுகம்’ என்பதன் இலக்கணக் குறிப்பு எழுதுக.
a) உம்மைத்தொகை **b) உவமைத்தொகை**
c) எண்ணும்மை d) வினைத்தொகை

RADIAN IAS ACADEMY

26. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.
பிசிராந்தையார் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.
a) இலக்கணமாகத் திகழ்ந்தவர் யார்?
**b) நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் யார்?**
c) இலக்கணமாக நட்புக்கு இருந்தவர் யார்?
d) நட்புக்கு சிறந்த புலவர் யார்?

27. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.
"கம்பர் இராமாயணத்தை இயற்றினார்"
a) கம்பர் இராமாயணத்தை இயற்றினாரா?
**b) இராமாயணத்தை இயற்றியவர் யார்?**
c) இராமாயணத்தை இயற்றியது கம்பரா?
d) இராமாயணத்தை இயற்றியது வால்மீகியா?

28. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.
"குறள் அற இலக்கியம் என்று கூறுவர்"
**a) அற இலக்கியம் என்று கூறும் நூல் எது?**
b) அற இலக்கியம் என்று கூறுவது ஏன்?
c) இலக்கியங்களில் அற இலக்கியம் எது?
d) அற இலக்கியம் என்பது சரியா?

RADIAN IAS ACADEMY

29. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.
'சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களைக் கொண்டது"
a) மூன்று காண்ட்கள் எதில் உள்ளது?
b) மூன்று காண்ட்கள் பற்றிக் கூறுவது யாது?
c) காண்டங்கள் மூன்றா?
**d) மூன்று காண்டங்கள் கொண்ட நூல் எது?**

30. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.
'மனிதரைத் தேவரோடு ஒப்பிட்டுக் கூறுவது பூவைநிலை"
a) மனிதரைத் தேவரோடு ஒப்பிடுவது யார்?
**b) பூவைநிலை என்றால் என்ன?**
c) மனிதரையும தேவரையும் ஒப்பிடலாமா?
d) மனிதரை ஒப்பிட்டுக் கூறும் நூல் எது?

31. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
a) பசித்தாலும் தின்னாது புல்லை புலி
**b) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது**
c) தின்னாது புல்லை புலி பசித்தாலும்
d) புல் தின்னாது பசித்தாலும் புலி

32. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
a) கரைப்பார் கல்லும் கரைத்தால் கரையும்
b) கல்லும் கரைத்தால் கரைப்பார் கரையும்
**c) கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்**
d) கரைத்தால் கல்லும் கரைப்பார் கரையும்

33. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
a) புல்லும் ஆயுதம் வல்லவனுக்கு
**b) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்**
c) ஆயுதம் புல்லும் வல்லவனுக்கு
d) புல்லும் வல்லவனுக்க ஆயுதம்

34. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
a) வீட்டுக் கட்டுத்தறியும் கம்பன் கவிபாடும்
b) கவிபாடும் கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும்
**c) கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்**
d) கட்டுத்தறியும் கவிபாடும் வீட்டுக் கம்பன்

35. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
**a) ஆரம் தாழ்ந்த அணிகிளர் மார்பு**
b) தாழ்ந்த ஆரம் அணிகிளர் மார்பு
c) அணிகிளர் மார்பு தாழ்ந்த ஆரம்
d) மார்பு தாழ்ந்த அணிகிளர் ஆரம்

36. பெயர்ச்சொல்லின் வகை அறிக. 'மதுரை'
a) பொருட்பெயர் b) சினைப்பெயர்
**c) இடப்பெயர்** d) காலப்பெயர்

37) பெயர்ச்சொல்லின் வகை அறிக. 'இலை'
a) பொருட்பெயர் **b) சினைப்பெயர்**
c) இடப்பெயர் d) காலப்பெயர்

38. பெயர்ச்சொல்லின் வகை அறிக 'அரசன்'
a) பொருட்பெயர் **b) சினைப்பெயர்**
c) இடப்பெயர் d) காலப்பெயர்

39. பெயர்ச்சொல்லின் வகை அறிக. 'கரியன்'
a) வினைப்பெயர் **b) பண்புப்பெயர்**
c) தொழிற்பெயர் d) சினைப்பெயர்

40. பெயர்ச்சொல்லின் வகை அறிக 'உறங்கல்'
a) பண்புப்பெயர் b) காலப்பெயர்
**c) தொழிற்பெயர்** d) இடப்பெயர்

41. 'வரை' என்னும் வேர்ச்சொல்லை வினைமுற்றாக மாற்றுக.
a) வரைந்து b) வரைதல்
**c) வரைந்தான்** d) வரைந்ததை

42. 'உதிர்' என்னும் வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக.
a) உதிர்ந்த b) உதிர c) உதிரு **d) உதிர்த்து**

43. 'கேள்' என்னும் வேர்ச்சொல்லை வினையாலணையும் பெயராக்குக.
**a) கேட்டானை** b) கேட்டு c) கேட்ட d) கேட்டல்

44. 'குடி' என்னும் வேர்ச்சொல்லை தொழில் பெயராக மாற்றுக.
a) குடித்தான் **b) குடித்தல்** c) குடித்த d) குடித்து

45. 'உழ' என்ற வேர்ச்சொல்லின் வினைமுனற்றுச் சொல்லை அறிக.
a) உழந்து b) உழுது **c) உழந்தான்** d) உழு

46. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.
a) அகம், ஆரம், ஈகை, இதம்
b) ஆரம், இதம், அகம், ஈகை
c) இதம், ஈகை, அகம், ஆரம்
**d) அகம், ஆரம், இதம், ஈகை**

47. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.
a) களம், கோடு, காடு., கொடு
b) காடு, கொடு, கோடு, களம்
c) கொடு, களம்., காடு, கோடு
**d) களம் , காடு, கொடு, கோடு**

48. அகர வரிசைப்படி சொற்களைச் சேர்க்க.
a) பட்டம். பாட்டு, போட்டி, பேட்டி
b) பேட்டி, பட்டம். போட்டி, பாட்டு
c) போட்டி, பாட்டு. பேட்டி. பட்டம்
**d) பட்டம், பாட்டு. பேட்டி. போட்டி**

49. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்
a) தாய்மொழி, தேன், தமிழ், துறை
b) தமிழ், துறை, தாய்மொழி, தேன்
**c) தமிழ். தாய்மொழி. துறை . தேன்**
d) தேன், துறை, தாய்மொழி. தமிழ்

50. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்
**a) சூட்டு, சோம்பல், தாவல்., நீதி**
b) சோம்பல், தாவல், சூட்டு. நீதி
c) தாவல், நீதி, சூட்டு. சோம்பல்
d) சூட்டு. சோம்பல், நீதி, தாவல்

51. 'தா' என்னும் ஓரெழுத்து ஒருமொழியின் பொருளைக் கண்டறிக.
**a) கொடு** b) கொடை c) வழங்குதல் d) பெறுதல்

52. 'மீ' என்னும் ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருள் யாது?
a) உச்சி b) சிகரம் **c) மேல்** d) உயரம்

53. 'பா' என்னும் ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருள் யாது?
**a) பாட்டு** b) இசை c) மெட்டு d) பாவை

54. 'தை' என்ற ஓரெழுத்தின் உரிய பொருள் கூறுக.
**a) மாதம்** b) தாவுதல் c) கொடுத்தல் d) குதித்தல்

55. ஓரெழுத்து ஒருமொழிக்குரிய சொல் கண்டறிக. 'நா'
a) நாள் b) நாடு c) நார் **d) நாக்கு**

56. 'சென்றான்' இச்சொல்லின் வேர்ச் சொல்லைக் கண்டறிக.
a) சென் b) சென்று **c) செல்** d) சென்ற

57.'பார்த்தான்' இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறிக.
a) பார்த்த b) பார்த்து **c) பார்** d) பார்த்தது

58.வேர்ச்சொல்லை தேர்வு செய்க. 'வனைந்தான்'
a) வனைந்து **b) வனை** c) வனைதல் d) வன்

59. வேர்ச்சொல்லை கண்டறிக. 'பேணார்'
**a) பேண்** b) பேணா c) பேணார் d) பேணு

60. வேர்ச்சொல்லை கண்டறிக. 'அளிததல்'
a) அளித்து b) அளித் **c) அளி** d) அள

61. பின்வரும் ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொல்லைக் கூறுக. " Cell Phone"
a) கையடக்கப்பேசி b) தொலைபேசி
**c) செல்லிடப்பேசி** d) செல்தூரப் பேசி

62. பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் தருக. "Internet "
a) வலை தளம் **b) இணைய தளம்**
c) பின்னல் தளம் d) உள் தளம்

63. பின்வரும் ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொல் தருக. "Tamil Software Tools"
a) தமிழ் சாப்ட்வேர் கருவிகள்
**b) தமிழ் மென்பொருள் கருவிகள்**
c) தமிழ் சாப்ட்வேர் டூல்ஸ்
d) தமிள் மென்பொருள் டூல்ஸ்

64. "Academy "என்பதன் சரியான தமிழ்ச் சொல்
a) கல்வி நிறுவனம் b) கல்வி ஆலயம்
**c) கல்விச் சாலை** d) கல்வி நிளையம்

65. "கம்ப்யூட்டர்" உரிய தமிழ்ச் சொல் தருக.
**a) கணிப்பொறி** b) தொலைக்காட்சி
c) வானொலி பெட்டி d) படம் காட்டி

66.ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | பரவை | பறவை |
|---|---|---|
| **a)** | **கடல்** | **பறப்பது** |
| b) | அலை | பிடுங்குதல் |
| c) | கப்பல் | பருந்து |
| d) | படகு | விமானம் |

67. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | கோருதல் | கோறுதல் |
|---|---|---|
| a) | விழைதல் | கூறுதல் |
| b) | விரும்புதல் | கொல்லுதல் |
| **c)** | **வேண்டுதல்** | **சொல்லுதல்** |
| d) | கூறுதல் | கேட்டல் |

68. ஒலி பேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | உரை | உறை |
|---|---|---|
| a) | சொற்றிறன் | வைத்தல் |
| **b)** | **சொல்** | **மூடி** |
| c) | பாராட்டதல் | உறைத்தல் |
| d) | கூறுதல் | சேருதல் |

69. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | ஆல் | ஆள் |
|---|---|---|
| a) | ஆலுதல் | ஆளுதல் |
| **b)** | **ஆலமரம்** | **ஒருவன்** |
| c) | ஆலை | நண்பர் |
| d) | ஆலு | ஆளை |

70. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | எரி | எறி |
|---|---|---|
| **a)** | **தீ** | **வீசு** |
| b) | நெருப்பு | காற்று |
| c) | எரித்தல் | எறித்தல் |
| d) | வீசுதல் | ஏறுதல் |

71. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
a) பாரி **b) சேரன்** c) அதியமான் d) காரி

72. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
a) மலர் b) இலை **c) காலம்** d) கிளை

73. பின்வரும் சொற்களில் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
a) மா b) பலா **c) அவரை** d) வாழை

74. பின்வரும் சொற்களில் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
a) சிலப்பதிகாரம் b) மணிமேகலை
c) குண்டலகேசி **d) இரட்சணிய யாத்திரிகம்**

75. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
a) எழுத்து **b) கணிதம்** c) சொல் d) பொருள்

76. சந்திப்பிழையை நீக்குக.
a) கலைகளைப் பிறருக்கு பயிற்றினான்
b) கலைமகளை பிறருக்குப் பயிற்றினான்
**c) கலைகளைப் பிறருக்குப் பயிற்றினான்**
d) கலைகளை பிறருக்கு பயிற்றினான்

77. ஒருமை — பன்மை பிழைகளை நீக்குக.
a) இளமையில் கல் என்பது ஒளவையார் மொழிகள்
b) இளமையில் கள் என்பது ஒளவையார் மொழிகள்
**c) இளமையில் கல் என்பது ஒளவையார் மொழி**
d) இளமையில் கல் என்பது ஒளவையார் மொழிவது

78. மரபுப் பிழைகள் அற்ற தொடரைக் குறிப்பிடுக.
a) கிளி கத்தும் **b) கிளி பேசும்**
c) கிளி கூவும் d) கிளி கீச்சிடும்

79.வழுவுச் சொற்களை நீக்கிய தொடரைக் காண்
a) கண்ணகியுடன் கோவலன் வந்தது
**b) கண்ணகியுடன் கோவலன் வந்தான்**
c) கண்ணகியுடன் கோவலன் வந்தார்கள்
d) கண்ணகியுடன் கோவலன் வந்தாள்

80.பிறமொழிச் சொற்களை நீக்கிய தொடரைக் குறிப்பிடுக.
a) பெரியவர்களைக் கண்டால் நமஸ்காரம் செய்ய வேண்டும்
b) பெரியவர்களைக் கண்டால் கும்பிட வேண்டும்
**c) பெரியவர்களைக் கண்டால் வணங்க வேண்டும்**
d) பெரியவர்களைக் கண்டால் கை தூக்க வேண்டும்

81. பிரித்தெழுதுக 'வெள்ளத்தனைய'
a) வெள்ளம் + அத்து + அனைய
**b) வெள்ளத்து +அனைய**
c) வெள் + அத்து + அனைய
d) வெள்ளம் + அத்தனைய

82. பிரித்தெழுதுக. 'காராண்மை'
a) கார் + உண்மை **b) கார் + ஆண்மை**
c) காரா + ஆண்மை d) காரு + உண்மை

83. பிரித்தெழுதுக. 'நல்குரவொழிய'
a) நல்குரவு + அழிய b) நல் + குரவொழிய
**c) நல்குரவு + ஒழிய** d) நல்கு + உரவொழிய

84. பிரித்தெழுதுக. 'ஒளியன்ன'
a) ஒளி + யன்ன b) ஒளி + என்ன
**c) ஒளி + அன்ன** d) ஒளி + யென்ன

85. பிரித்தெழுதுக. 'நல்லறம்'
a) நல் + அறம் **b) நன்மை + அறம்**
c) நன் + அறம் d) நல்லு + அறம்

86. எதிர்ச்சொல் தருக. 'மாலை'
a) நண்பகல் b) இரவு **c) காலை** d) மதியம்

87. எதிர்ச்சொல் தருக. ' நற்குணம்'
a) தீவினை b) பாவம் **c) தீக்குணம்** d) தீமை

88. எதிர்ச்சொல் தருக. 'எதிரி'
**a) நண்பர்** b) உற்றார் c) உறவினர் d) பகைவர்

89. எதிரிச்சொல் தருக. 'புகழ்
a) புகழ்ச்சி **b) இகழ்** c) இகழ்ச்சி d) பிரிதல்

90. 'தீமொழி' என்பதன் எதிர்ச்சொல் தருக.
**a) நன்மொழி** b) தீமை மொழி c) நல்லன மொழி d) நா மொழி

RADIAN IAS ACADEMY

| | |
|---|---|
| 91. ஈண்டு | சினம் |
| செற்றம் | துன்பம் |
| அரும் | இவ்விடம் |
| வதை | கொல்லும் |

**a) இ அ ஈ ஆ** b) அ இ ஆ ஈ

c) இ ஈ அ ஆ d) ஆ அ இ ஈ

| | |
|---|---|
| 92. கேண்மை | தென்னை |
| அக்கறை | நட்பு |
| தெங்கு | வெண்மயிர் |
| நரை | கவனம் |

a) அ ஆ இ ஈ b) இ அ ஆ ஈ

c) ஈ இ ஆ அ **d) ஆ ஈ அ இ**

| | |
|---|---|
| 93. குறிஞ்சி | வயல் |
| முல்லை | கடல் |
| மருதம் | மலை |
| நெய்தல் | காடு |

a) அ ஈ ஆ இ b) ஈ அ ஆ இ

c) ஆ ஈ இ அ **d) இ ஈ அ ஆ**

| | |
|---|---|
| 94. பாண்டியநாடு | வஞ்சி |
| சோழநாடு | மதுரை |
| சேரநாடு | காஞ்சி |
| தொண்டைநாடு | புகார் |

**a) ஆ ஈ அ இ** b) ஈ இ அ ஆ

c) அ ஆ ஈ இ d) இ ஈ அ ஆ

| | |
|---|---|
| 95. கெடுப்பதூஉம் | ஒற்றளபடை |
| ஓஒதல் வேண்டும் | சொல்லிசையளபெடை |
| உரனசைஇ | உயிரளபெடை |
| கலங்கு நெஞ்சமில்லை | இன்னிசையளபெடை |

a) அ இ ஆ ஈ b) இ ஈ அ ஆ

**c) ஈ இ அ ஆ** d) ஈ அ ஆ இ

96. பின்வரும் தொடரால் குறிக்கப்படும் சான்றோர்
"சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'

a) கவிமணி b) கம்பர் **c) ஆண்டாள்** d) கபிலர்

97. பின்வரும் தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்
"பாட்டுக்கொரு புலவன்"

a) பாரதிதாசன் **b) பாரதியார்** c) கண்ணதாசன் d) சுரதா

98. பின்வரும் தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்
"கப்பலோட்டிய தமிழன்"

a) மு.வ. b) திரு.வி.க. **c) வ.உ.சி.** d) உ.வே.சா.

99."கல்வியில் பெரியவர்" - இத்தொடரால் குறிக்கப்படும் சான்றோர்

a) சீவகன் b) வள்ளுவர். **c) கம்பர்** d) இளங்கோவடிகள்

100. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று வியந்து கூறியவர்

a) மு.வ b) திரு.வி.க.. c) சேக்கிழார் **d) பாரதியார்**

********

RADIAN IAS ACADEMY

RADIAN IAS ACADEMY
&
RADIAN BOOK SHOP
711 P.H.Road
Opp. Anna Arch, N.S.K. Nagar
CHENNAI-106.Ph.9840400825
32, Press Colony
Opp. Mattu Thavani Central Bus Stand
MADURAI-7. Ph.9344100065